පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 393

ආයතනයේ නම: ලලිත් ඇතුලත්මුදලි මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල

පාර්ලිමේන්තුවේ පොදු ව්‍යාපාර පිලිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 120 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 393

நிறுவனத்தின் பெயர்: லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

பாராளுமன்ற பொது முயற்சிகள் பற்றிய குழுவினால் சபையில் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக 120 (4) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No: 393

Name of the institution:Lalith Athulathmudali Mahapola Higher Education Scholarship Trust Fund

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Enterprises in terms of Standing Order No. 120 (4)

பொது முயற்சிகள் பற்றிய குழு - 16 ஆவது கூட்டம்

2025-07-09

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
1.6	**நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் குழு கூட்டங்களை நடத்துதல்** நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் குழு கூட்டங்களை நடத்துவதில் சீரான தன்மை இல்லை, மேலும் சில ஆண்டுகளாக நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் குழு கூட்டங்கள் நடத்தப்படவில்லை.	நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் குழு கூட்டங்களை நடத்துவதற்கான பொருத்தமான வழிகாட்டுதல்களைத் தயாரித்தல்.	தற்போது வழக்கமான மாதாந்த கூட்டங்களை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய அரசு நிறுவன சுற்றறிக்கைகளின் அடிப்படையில் நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் குழுவிற்கான வழிகாட்டு நெறிமுறை வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது, அது விரைவில் இறுதி செய்யப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
1.7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம்** கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் காலாண்டுக்கு ஒரு முறையாவது நடாத்தப்பட வேண்டும் என்றபோதிலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் தலா ஒரு முறை மட்டுமே நடாத்தப்பட்டன, மேலும் 2024 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் எதுவும் நடாத்தப்படவில்லை.	i. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ii. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு மிகவும் அவசியமான மற்றும் பொருத்தமான நபர் தலைமை தாங்குவதை உறுதி செய்தல்	2025.12.22 முதல் ஒரு புதிய உள்ளகத் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் 2025-01-02 அன்று நடைபெற்றது. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரும், நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் குழுவின் உறுப்பினருமானவர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.	செயற்படுத்தப்பட்டு ள்ளது.
1.8	**மூலோபாயத் திட்டம்**	புதிய அரசாங்கத்தின் கொள்கையுடன் இயைந்தவாறு மூலோபாயத் திட்டத்தை இற்றைப்படுத்தல் மற்றும் அது பற்றி	2025 டிசம்பர் மாதத்தினுள் உயர் முகாமைத்துவத்தின் வெற்றிடங்நிப்பப்பட்டதுடன்	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
	மகபொல நம்பிக்கை நிதயித்தினால் 2024 – 2026 ஆண்டிற்கான கூட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும் 2025 இற்காக இற்றைப்படுத்தப்பட்டிராமை	ககணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	மூலோபாயத் திட்டத்தை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், துரிதமாக நம்பிக்கை நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.	
1.11	**உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருத்தல்** உள்ளக ககணக்காய்வாளர் பதவிக்கு 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்த உத்திரோயகத்தர் 2023 யூலை 30 ஆம் திகதி பதவி விலகியமையின் பின்னர் 2023 ஒக்தோபர் 10 ஆம் திகதி முதல்வர்த்தக திணைக்களத்தின் கணக்காளர் பதில் கடமை அடிப்படையியல் அப்பதவியில் நியமிக்கப்பட்டாலும் அவரும் 2024 ஏப்ரல் கேட்டு விலகியமையின் காரணமாக அன்று முதல் இப்பதவி வெற்றிடமாகியுள்ளமை.	மகாபொல நம்பிக்கை நிதியத்தின் பணிகளை உரிய முறையில் நடாத்துவதற்குத் தேவையான அலுவலர்களை ஆட்சேர்த்துக்கொள்ளலை அடிப்படை முன்னுரிமையாக கருதி அதனை துரிதாக நிறைவு செய்தல் மற்றும் அது பற்றிய முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	2025.12.22 முதல் புதிய உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.	நிறைவு செய்யப்பட்டுள்ளது
1.12	**ஆளணி அமைப்பு** 2024 டிசம்பர் 20 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரதத்தின் பிரகாரம், 2025 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று நம்பிக்கை நிதியத்தின் மொத்த ஊழியர்களில் 09 வெற்றிடங்கள் உள்ளன. இதில் சிரேட்ட முகாமைத்துவ மட்டப் பதவி வெற்றிடம் 01, மத்திய முகாமைத்துவ பதவி வெற்றிடம் 03, முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடம் 03, மற்றும் ஆரம்ப நிலை மட்டப் பதவி வெற்றிடங்கள் 02 என வெற்றிடங்கள் அடங்கும். மேலும், நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் பதவியும் 2024 அக்டோபர் முதல் வெற்றிடமாக உள்ளது.	மகாபொல நம்பிக்கை நிதியத்தின் பணிகளை உரிய முறையில் நடாத்துவதற்குத் தேவையான அலுவலர்களை ஆட்சேர்த்துக்கொள்ளலை அடிப்படை முன்னுரிமையாக கருதி அதனை துரிதாக நிறைவு செய்தல் மற்றும் அது பற்றிய முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	• சிரேட்ட முகாமைத்துவ மட்டப் பதவி 1 - ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. • மத்திய முகாமைத்துவ பதவி வெற்றிடம் 03 - ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. • முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடம் 02 – • ஆரம்ப நிலை மட்டப் பதவி வெற்றிடங்கள் 02 - ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1 -சாரதி - பிரதமர் அலுவலகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள மீளாய்வுக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
			2 - அலுவலக உதவியாளர் - ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை	
2021 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழு				
08.	மஹபொல சட்டத்தை திருத்தியதன் பின்னர் நிறுவனத்தின் உள்ளக நிலைமையை மேம்படுத்தல் மற்றும் அது பற்றிய திட்டமொன்றை தயாரித்ததன் பின்னர் 06 மாதங்களுக்குள் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் பங்களிப்பு தொடர்பாக காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறலை தயாரித்தல்.	2021.01.08 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் பரிந்துரைக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அது பற்றிய முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	மஹபொல சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு நிதியத்தின் தலைவராக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அல்லது ஓய்வு பெற்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியொருவரை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், முகாமைத்துவ மட்டப் பதவிகளைத்துக்கும் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. அபிவிருத்தி லொத்தர் சபையின் பங்களிப்பு தொடர்பாக காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறலை தயாரித்தல் தொடர்பாக கவனத்திற்கொள்ளும்போது, அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 11(b) பிரிவுக்கமைய அந்த சபையின் இலாபம், மஹபொல நிதியத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்காக ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது பற்றி ஜனாதிபதி நிதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டிராமையினால் நிலவுகின்ற முரண்பாடு காரணமாக எதிர்வுகூறலை தயாரிப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுகின்றது.	-
09.	இணையவழி லொத்தருக்கான பெறுகை நடவடிக்கையின்போது முதலாவது பெறுகை நடவடிக்கையை	i. இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை	இணையவழி லொத்தருக்கான பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இணைப்பு 01

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
	இரத்துச்செய்து இரண்டாவது முதலீட்டாளருடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளல்.	துரிதப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ii. அதற்காக மேலும் தகவல்கள் அவசியமாயின் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.	ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் முன்னேற்றத்தை அறிக்கைப்படுத்துமாறு குறித்த ஆணைக்குழுவிடம் கோரப்பட்டுள்ளது. நிதியம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பிரயோக கணக்காய்வின்போது இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தக் கணக்காய்வுக்கான விலைமனுக்கோரல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.	
10.	நம்பிக்கை நிதியதத்தின் துணைக் கம்பனியான நெஷனல் வெல்த் கோப்பரேஷன் மற்றும் நெட் வெல்த் சிகியுரிட்டி கம்பனி இலாபமீட்டல் பற்றி பொறுப்புக்கூற வேண்டிய தரப்புக்களை இனங்கண்டுகொள்ளும் வரை இந்த 02 கம்பனிகளையும் கலைத்து விடாதிருப்பதற்கு பிரதான கணக்கீட்டு அலுவலர்/ கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைத்திருத்தல். KPMG கம்பனி தயாரிக்கும் அறிக்கையைப் பரீட்சித்தல் மற்றும் நீதிமன்ற கட்டளைக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டிருத்தல்.	இது தொடர்பான முழுமையான தடயவியல் கணக்காய்வை மேற்கொண்டு அதன் பரிந்துரைப் பிரகாரம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அல்லது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் மற்றும் அது பற்றிய முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	நிதியம் தொடர்பான தடயவியல் கணக்காய்வின் விடயப் பரப்புக்குள் துணைக்கம்பனிகளின் நடவடிக்கைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் உரிய அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தக் கணக்காய்வுக்கான விலைமனுக்கோரல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
11.	இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (SLIIT) உரிமையை வெளியிடுவதற்கு முடியுமான, அமைச்சு மற்றும் நிதியத்திடமுள்ள புதிய தகவல்கள் மற்றும் அது பற்றிய அமைச்சின் அவதானிப்புக்கள் 01 மாதத்திற்குள் பொது முயற்சிகள் குழுவின் செயலாளருக்கு சமர்ப்பிக்குமாறு பிரதான கணக்கீட்டு	1. இந்த நிறுவகத்தை தனியார் துறைக்குச் சொந்தமாக்குவதற்கான நடவடிக்கையினுள் பாரிய ஊழல் மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் இந்த அலுவலர் தொடர்பாக முழு அதிகாரத்தைக் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணையை	i. நிதியம் தொடர்பான பிரயோக கணக்காய்வின் விடயப் பரப்புக்குள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்துடன் (SLITT) தொடர்புடையதாக 1999 முதல் 2024 வரை விசாரிக்கும் அலுவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
	அலுவலர்/ கணக்கீட்டு அலுவலருக்கு பணித்திருத்தல்.	மேற்கொள்வதற்கும் அதனூடாக வெளிப்படுத்தப்படும் தகவல்களுக்கமைய உரிய தண்டனையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.	அதற்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தக் கணக்காய்வுக்கான விலைமனுக்கோரல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.	
		2. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLITT) நம்பிக்கை நிதியத்தின் துணைக் கம்பனியாக்குவதற்காக தேவையான சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்தல்.	2. இந்த நிறுவகத்தை மீண்டும் அரசாங்கத்திற்கு உரிமை மாற்றம் செய்தல் அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானம் என்பதனால் அதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
		3. இந்த நிறுவகத்தை மீண்டும் நிதியத்திற்கு உரிமை மாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள பரிந்துஜரகள் தொடர்பாக கவனத்தை செலுத்தும்போது சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக மீண்டும் கவனத்திற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுத்தல்.	3. குறித்த சட்ட ரீதியான நிலைமை பற்றிய கருத்து அமைச்சரவைக்குரியதாக இருப்பதனால் அதனை மீண்டும் அமைச்சரவையே உசாவுதல் வேண்டுமென சட்ட மா அதிபர் தரிவித்துள்ளார்.	
		4. இந்த நிறுவகத்தை உரிமை மாற்றம் செய்தல் தொடர்பான தீர்மானத்தை அமைச்சரவைத் தீர்மானமொன்றின் ஊடாக மீண்டும்		

இணைப்பு 01

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
		மீளாய்வுக்குட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.		
2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள்.				
3.1	பல்கலைக்கழகத்திற்கு அனுமதித்துக்கொள்ளப்படும் மற்றும் புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான அனைத்து மாணவர்களுக்கும் மஹபொல புலமைப்பரிசிலை வழங்குவதற்கான இலக்கு காணப்பட்டாலும், பெற்றோரின் வருடாந்த வருமானம் ரூ. 500,000 இலும் குறைவாக இருத்தல் வேண்டுமென்ற அளவுகோலை அடிப்படையாகக் கொண்டமையினால், 2020/2021 மற்றும் 2021/2022 கல்வியாண்டுடன் தொடர்பாக மஹபொல புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் முறையே 20,000 மற்றும் 26,000 இற்கிடையில் 15,000 மற்றும் 16,000 மாணவர்களுக்கு அதாவது, 75% மற்றும் 61.5% மாணவர்களுக்கு மாத்திரம் புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்தமை. (கணக்காய்வறிக்கை - D; 2022- (3.1) பந்தி)	மாணவர்களின் எண்ணிக்கை மாற்றமடைதல், செலுத்தல் தாமதங்கள் பற்றிக் கவனத்தை செலுத்தி மஹபொல செலுத்தல் பொறிமுறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் புலமைப்பரிசிலுக்கு தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.	நிதியத்திலுள்ள நிதியின் அடிப்படையில் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதுடன், நிதியத்திற்ன் விருத்திக்கேற்ப புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதற்கு எதில்காலத்தில் எதிர்பர்க்கப்படுகின்றது. மேலும், கொடுப்பனவு காலத்தில் ஏற்படும் தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தற்போது 2025 ஒக்தோபர் மாதம் வரை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
3.2	மாதாந்த புலமைப்பரிசில் செலுத்தல் தொடர்பான ஆவணங்கள் முந்தைய மாதத்தின் 30 ஆம் தேதிக்குள் உயர்கல்வி நிறுவனங்களுக்குச்	i. மஹபொல புலமைப்பரிசில் தவணைத் தொகை செலுத்தும்போது ஏற்படும் தாமதங்கள் தொடர்பாக	புலமைப்பரிசில் செலுத்தல் பொறிமுறையை துரிதப்படுத்துவதற்காக முகாமைத்துவ தகவல்கள்	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
	சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், 2023 ஜூலை முதல் செப்டம்பர் 2023 வரையிலான காலப் பகுதியினுள் 62 சந்தர்ப்பங்களில் நிதியத்தினால் அந்த ஆவணங்கள் 21 உயர் கல்வி நிறுவகங்களுக்கு அனுப்பும் அலுவல் 67 முதல் 119 நாட்கள் வரை தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மஹபொல உயர்கல்வி மாதாந்த புலமைப்பரிசில் தவணைத் தொகையானது சம்பந்தப்பட்ட மாதத்தின் 15 ஆம் தேதிக்குள் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், மாதாந்த கல்வி உதவித்தொகை செலுத்துதலானது ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப் பகுதியினுள் 10 முறை, 63 முதல் 126 நாட்கள் தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது.	கவனத்தைச் செலுத்தி செலுத்தல் பொறிமுறையை துரிதப்படுத்துவத்றகான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். ii. அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகையை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்றகொள்ளல்.	முறைமையொன்றை அறிமுகஞ் செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகங்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் கடிதத்தை இற்றைப்படுத்தி அனைத்துப் பல்கலைக்கழகங்கள் , கல்வி நிறுவகங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.	
3.3	நிதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 2023 டிசம்பர் 13 முதல் 17 வரை ஜாஎல நகர சபை மைதானத்தில் மஹபொல வர்த்தக கண்காட்சியொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கூற்றுக்கமைய 2,9046,884 நட்டம் ஏற்பட்டிருத்தல்.	i. தடயவியல் கணக்காய்வை மேற்கொள்ளும்போது இந்த பிரதான விடயத்தையும் உள்ளடக்குதல். ii. இது பற்றி எடுக்கப்படும் பிரதான நடவடிக்கை பற்றிய தகவல்களை முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	நிதியம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தடயவில் கணக்காய்வின்போது இந்த விடயமும் விடயப்பரப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. தடயவில் கணக்காய்வுக்கான விலைமனுக்கோரல் நடவடிக்கைகள் தற்பொது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தவிர குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் நிதிசார் குற்றங்கள் விசாரணை பிரிவுக்கும் எழுத்து மூலமான முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றத. அத்துடன் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினாலும்	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
			விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான எழுத்தாவணங்கள் அந்த ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.	
3.4	2023 ஆம் ஆண்டில், ஒப்பந்த அடிப்படையில் 02 வருட காலத்திற்கு 05 வர்த்தகக் கண்காட்சி ஒருங்கிணைப்பு அலுவலர்களும் 03 முகாமைத்துவ உதவியாளர்களும் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களின் நியமனங்களின் சட்டப்பூர்வத்தன்மை, ஆட்சேர்ப்பு செயல்முறை, அவர்களின் படிகளை நிர்ணயிப்பதற்கான அடிப்படை, கடமைகள் ஒப்படைப்பு, கடமைக்கு அறிக்கைப்படுத்தும் இடங்கள், கிட்டிய மேற்பார்வை அதிகாரி மற்றும் கடமைகளை நிறைவேற்றல் தொடர்பான எழுத்து மூலமான ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லையென்பதோடு, அந்த அலுவலர்களுக்கு, 2023 ஜூலை முதல் 2024 பெப்ரவரி வரையிலான காலத்திற்கு ரூ. 1,920,833ஐ தொகை சம்பளம் மற்றும் படிகளாக நிதியத்தினால் செலுத்தப்பட்டிருத்தல்.	I. தடயவியல் கணக்காய்வை மேற்கொள்ளும்போது இந்த பிரதான விடயத்தை உள்ளடக்குதல். II. இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	நிதியம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தடயவியல் கணக்காய்வின்போது இந்த விடயமும் விடயப்பரப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. தடயவியல் கணக்காய்வுக்கான விலைமனுக்கோரல் நடவடிக்கைகள் தற்பொது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
3.5	முன்மொழியப்பட்ட சர்வதேச பல்கலைக்கழக கிராமத்தின் நிர்மாணத்திற்காக ஹொரானை மில்லேவ வத்த காணியில் 123 ஏக்கர் 2 ரூட் 2 பர்ச்சஸ் (29.7) காணியை கொள்வனவு செய்வதற்காக 2021 டிசம்பர் 29 ஆம் திகதி நிதியத்தினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூ. 340,200,000 முன்பணம் செலுத்தியிருந்தபோதிலும், அந்த	i. தடயவில் கணக்காய்வை மேற்கொள்ளும்போது இந்த பிரதான விடயத்தை உள்ளடக்குதல். ii. அது தொடர்பான முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியிடப்பட்டு	நிதியம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தடயவில் கணக்காய்வின்போது இந்த விடயமும் விடயப்பரப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. தடயவில் கணக்காய்வுக்கான விலைமனுக்கோரல் நடவடிக்கைகள் தற்பொது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

	விடயம்	பரிந்துரை	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	தற்போதைய நிலைமை
	அதிகார சபையினால் 2023 ஒக்டோபர் 24 அன்று 117 ஏக்கர் 01 ரூட் 22.7 காணிக்கு மாத்திரமே ஆட்சியுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, நிதியத்திற்கு 6 ஏக்கர் 1 ரூட் 07 பர்ச்சஸ் காணி இழப்பு ஏற்பட்டிருந்ததுடன், ரூ. 17,311,224 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும், காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6 (1) இன் பிரகாரம் ஒரு காணிக்கு இலவச அளிப்பு பத்திரமொன்றை வழங்குவதற்கு அந்தக் காணிக்கான இழப்பீட்டு மதிப்பீடு நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதோடு, இழப்பீட்டு மதிப்பீடு நிறைவு செய்யப்படாமையினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இலவச அளிப்பு பத்திரமொன்று கிடைத்திருக்காமை.	குழுவுக்கு அறிக்கைப்படுத்தல்	மேலும், 123 ஏக்கர், 2 ரூட் மற்றும் 29.7 பேர்ச்சஸ் பரப்பளவுள்ள இந்த காணியை கொள்வனவு செய்வதற்கான அடிப்படை இணக்கப்பாடு நிலவிய போதிலும், நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளதன் பிரகாரம் அவர்கள் 117 ஏக்கர், 01 ரூட் மற்றும் 22.7 பேர்ச்சஸ் நிலத்திற்கு மட்டுமே ஆட்சி உடைமையை வழங்கியுள்ளனர்.இதற்குக் கூறப்படும் காரணம் என்னவென்றால், 6 ஏக்கர், 1 ரூட், 07 பேர்ச்சஸ் காணியின் ஒரு பகுதி பாதை அமைப்புக்காக ஒதுக்கப்பட வேண்டியிருந்ததால், அந்த அளவு மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு உள்ளடக்கப்படவில்லை என்பதாகும். இருப்பினும், அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் இந்த 117 ஏக்கர் 1 ரூட், 22.7 ஏக்கர் காணிக்கு 2.249 பில்லியன் ரூபா செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தமையினால் அந்தளவு தொகையை முதலீடு செய்வதற்கு நிதியத்தினால் இயலாமையினால் இதுவரை செலுத்தப்பட்ட முன்பணத் தொகையான ரூ. 340,200,000 தொகையை நியாயமான வட்டியுடன் மீளப் பெற்றுக்கொள்ளல் குறித்து நம்பிக்கை நிதியத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக 2 நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளன.	